பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
11 05 2025 **SUNDAY 7.15 PM**
ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- தீவிரவாதிகளை மட்டுமே குறிவைத்து ஆபரேஷன் சிந்தூர் மேற்கொள்ளப்பட்டதாக இந்திய ராணுவம் தெரிவித்துள்ளது.

- அறிவியல் மற்றும் ஆராய்ச்சி மூலமாக எதிர்கால தலைமுறையின் மேம்பாட்டை உறுதி செய்யும் நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு முக்கியத்துவம் தந்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- பின்தங்கிய நிலையில் உள்ள கிராமங்களில் மருத்துவ கட்டமைப்பை மேம்படுத்த தொடர் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- போர் நிறுத்தம் ஏற்பட ரஷ்யா சம்மதம் தெரிவித்திருப்பதை தாம் வரவேற்பதாக யுக்ரைன் அதிபர் திரு விளாடிமீர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

- டென்மார்க் சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் தன்வி ஷர்மா பட்டம் வென்றார்

--இனி விரிவான செய்திகள்--

<<<<<<>>>>>

தீவிரவாதிகளை மட்டுமே குறிவைத்து ஆபரேஷன் சிந்தூர் மேற்கொள்ளப்பட்டதாக இந்திய ராணுவம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் ஆபரேஷன் சிந்தூர் தொடர்பாக இன்று நடைபெற்ற முப்படைகளின் தலைமை இயக்குனர்கள் பங்கேற்ற செய்தியாளர் சந்திப்பில், ராணுவ செயல்பாடுகளுக்கான தலைமை இயக்குனர் லெப்டினன்ட் ஜென்ரல் Rajiv Ghai இதனை தெரிவித்தார்.

தீவிரவாத பரவலை தடுக்கும் நோக்கோடு ஒன்பது தீவிரவாத முகாம்கள் மீது துல்லியமான தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், இத்தாக்குதல்களில் 100-க்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாகிஸ்தான் ராணுவ நிலைகள் மீது எந்த தாக்குதலும் நடத்தப்படவில்லை என்று அவர் கூறினார்.

பாகிஸ்தானின் ராணுவ செயல்பாடுகளுக்கான தலைமை இயக்குனர், முதலில் தம்மை தொடர்புகொண்டு பேசியதையடுத்தே, சண்டை நிறுத்தம் ஏற்பட்டதாக அவர் தெரிவித்தார்.

நாளை நண்பகல் 12 மணியளவில் அவரோடு மீண்டும் பேச்சு நடைபெறவுள்ளதாக லெப்டினன்ட் ஜெனரல் Rajiv Ghai தெரிவித்தார்.

பாகிஸ்தான் முயற்சித்த வான்வழி தாக்குதல் அனைத்தும் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டதாக விமானப்படை செயல்பாடுகளுக்கான தலைமை இயக்குனர் ஏர் மார்ஷல் ஏ கே பாரதி கூறினார்.

பாகிஸ்தானுக்கு உரிய பதிலடி கொடுக்கும் வகையில் கப்பற்படையும் தயார் நிலையில் இருந்ததாக அதன் செயல்பாடுகளுக்கான தலைமை இயக்குனர் வைஸ் அட்மிரல் பிரமோத் தெரிவித்தார்.

இந்த செய்தியாளர் சந்திப்பின்போது தாக்குதல் தொடர்பான காணொலிகளும் வெளியிடப்பட்டன.

<<<<<<>>>>>

அறிவியல் மற்றும் ஆராய்ச்சி மூலமாக எதிர்கால தலைமுறையின் மேம்பாட்டை உறுதி செய்யும் நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு முக்கியத்துவம் தந்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தேசிய தொழில்நுட்ப தினத்தையொட்டி, தமது சமூக வலைதள பதிவில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

1998-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பொக்ரான் சோதனையை நினைவுகூறும் வகையில் இத்தினம் கொண்டாடப்படுவதாக பிரதமர் தெரிவித்தார்.

நாட்டில் உள்ள விஞ்ஞானிகளுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாகவும், பெருமிதப்படும் வகையிலும் இத்தினம் அமைந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

விண்வெளி, செயற்கை நுண்ணறிவு, டிஜிட்டல் கண்டுபிடிப்பு, பசுமை தொழில்நுட்பம் என்று பல்வேறு தொழில்நுட்ப அம்சங்களில் உலக அளவில் இந்தியா முன்னணியில் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

மனிதகுல உயர்வு, தேச பாதுகாப்பு, எதிர்கால வளர்ச்சிக்கு உதவும் வகையில் தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டும் என்று பிரதமர் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

இந்தியா மற்றும் ரஷ்யாவின் உயர் பாதுகாப்பு தொழில்நுட்ப சங்கமமாக பிரம்மோஸ் திகழ்கிறது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

லக்னோவில் இன்று பிரம்மோஸ் வான்வெளி ஒருங்கிணைப்பு மற்றும் சோதனை மையத்தை காணொலி வாயிலாக தொடங்கிவைத்து அவர் பேசினார்.

உத்தரப்பிரதேச பாதுகாப்பு தொழில் வழித்தடத்தை மேம்படுத்தும்வகையில் இதுவரை 180 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளதாகவும், 34 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடுகள் மேற்கொள்ளப்பட வழிவகை செய்யபப்ட்டிருப்பதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

பாதுகாப்பு தளவாட உற்பத்தியில், லக்னோ முன்னேற்றம் கண்டு வருவதாகவும், வெகு விரைவில் அது தொழில்நுட்பத்தின் சங்கமமாக அடையாளம் காணப்படும் என்றும் அவர் கூறினார்.

பாதுகாப்புத்துறையில் சுயசார்பு நிலையை அடையும் நோக்கோடு, மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

இதன்மூலம், நாட்டிற்கு தேவையான ஆயுதங்கள் மற்றும் சாதனங்கள் உற்பத்தி செய்யப்படுவதோடு, உலக நாடுகளுக்கு அவற்றை ஏற்றுமதி செய்யும் வகையில் வளர்ச்சி எட்டப்படும் என்றும் திரு ராஜ்நாத் சிங் நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<<<>>>>>

நாட்டின் மேற்கு எல்லைப்பகுதிகளில் உள்ள பாதுகாப்பு நிலவரம் குறித்து ராணுவ தளபதி ஜெனரல் உபேந்திர துவிவேதி, இன்று ஆய்வு மேற்கொண்டார்.

சண்டை நிறுத்தம் மற்றும் அதனைத்தொடர்ந்து நேற்றிரவு எல்லைப்பகுதியில் நிகழ்த்தப்பட்ட வான்வழி அத்துமீறல்கள் குறித்து மேற்கு எல்லைப்பகுதிகளில் உள்ள ராணுவ அதிகாரிகளுடன் காணொலி வாயிலாக அவர் ஆலோசனை மேற்கொண்டார்.

சண்டை நிறுத்தத்தை மீறி எல்லைப்பகுதிகளில் அத்துமீறல்கள் மேற்கொள்ளப்பட்டால் தகுந்த பதிலடி கொடுக்க ராணுவ அதிகாரிகளுக்கு முழு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதாக இந்திய ராணுவம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

பின்தங்கிய நிலையில் உள்ள கிராமங்களில் மருத்துவ கட்டமைப்பை மேம்படுத்த மத்திய அரசு தொடர் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

வேலூரில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று பேசிய அவர், மக்களுக்கு சிறப்பான மருத்துவ சேவைகள் கிடைக்கும் வகையில் அரசு செயலாற்றி வருவதாக கூறினார்.

*(சவுண்ட் பைட் - எல். முருகன் - 47 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

டிஜிட்டல் கைது அச்சுறுத்தல் தொடர்பாக, எட்டு மாநிலங்களில் மத்திய புலனாய்வு முகமை அதிகாரிகள் இன்று சோதனை மேற்கொண்டனர்.

அஸ்ஸாம், மேற்குவங்கம், பீகார், தமிழகம், கர்நாடகா, தெலங்கானா, மகாராஷ்ட்ரா, உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் 42 இடங்களில் மேற்கொள்ளப்பட்ட இச்சோதனையின் முடிவில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக சிபிஐ தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, சிபிஐ வெளியிட்டுள்ள அறிக்கையில், டிஜிட்டல் கைது, முதலீட்டு மோசடி உள்ளிட்ட சட்ட விரோத செயல்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்ட சிம் கார்டுகள் தொடர்பாக சில தொலைத்தொடர்பு நிறுவனங்களின் விற்பனை பிரதிநிதிகளுக்கு சொந்தமான இடங்களில் இச்சோதனை நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொபைல் போன்கள், மின்னணு சாதனங்கள், தவறாக பயன்படுத்தப்பட்ட சிம் கார்டு பயனாளிகளின் ஆவண நகல்கள் உள்ளிட்டவை இச்சோதனையின்போது கைப்பற்றப்பட்டுள்ளதாக சிபிஐ கூறியுள்ளது.

<<<<<<>>>>>

போர் நிறுத்தம் ஏற்பட ரஷ்யா சம்மதம் தெரிவித்திருப்பதை தாம் வரவேற்பதாக யுக்ரைன் அதிபர் திரு விளாடிமீர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, தமது சமூக வலைதள பக்கத்தில் இதனை குறிப்பிட்டுள்ள அவர், முழுமையான மற்றும் நம்பகமான போர் நிறுத்தமே அமைதிக்கான முதல்படி என்று கூறியுள்ளார்.

நிலம், கடல் மற்றும் வான்வெளி என அனைத்து பகுதிகளிலும் இந்த போர் நிறுத்தம் குறைந்தபட்சம் 30 நாட்கள் நீடிக்க வேண்டும் என்று திரு ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

முன்னதாக, யுக்ரைனுடன் நேரடி பேச்சுக்கள் மேற்கொள்ள ரஷ்யா தயாராக உள்ளதாக அந்நாட்டு அதிபர் திரு விளாடிமீர் புட்டின் கூறியுள்ளார்.

பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, போலந்து நாட்டு தலைவர்கள் கீவ் நகருக்கு சென்று பேச்சுவார்த்தை நடத்திய நிலையில், க்ரெம்லின் நகரில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

துருக்கி தலைநகரான இஸ்தான்புல்லில் இருநாட்டு போர் நிறுத்தம் தொடர்பான பேச்சுக்கள் நடைபெற வேண்டும் என்று அவர் கூறினார்.

இதுதொடர்பாக, துருக்கி அரசுடன் தாம் பேச இருப்பதாகவும் திரு விளாடிமீர் புட்டின் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

டென்மார்க் சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் தன்வி ஷர்மா பட்டம் வென்றார்

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர் 21-13, 21-10 என்ற செட் கணக்கில் இந்தோனேஷியாவின் Ni Kadek Dhinda Amartya Pratiwi –ஐ வென்றார்.

-----------------

மகளிர் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டி இறுதியாட்டத்தில் இந்தியா 97 ரன் வித்தியாசத்தில் இலங்கையை வென்று கோப்பையை கைப்பற்றியது.

கொழும்பில் நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த இந்தியா, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 342 ரன் எடுத்தது.

Smriti Madhana அபாரமாக ஆடி 101 பந்துகளில் 116 ரன் குவித்தார்.

343 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த இலங்கை 48 புள்ளி இரண்டு ஓவரில், அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து, 245 ரன் எடுத்தது.

Sneh Rana நான்கு விக்கெட்டுகளையும், Amanjot Kaur மூன்று விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

-------------

உலகக்கோப்பை வில்வித்தை போட்டியில், இந்தியா இன்று இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

ஷாங்காயில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் தீபிகா குமாரியும், ஆடவர் ஒற்றையர் பிரிவில் Parth Sushant Salunkhe–ம் இப்பதக்கங்களை கைப்பற்றினர்.

இப்போட்டியில் இந்தியா இரண்டு தங்கம், ஒரு வெள்ளி, நான்கு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

----------------

ஐக்கிய அரபு எமிரேட்டில் நடைபெற்ற ஆசிய செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் முரளி கார்த்திகேயன் ஆடவர் பிரிவிலும், Padmini Rout மகளிர் பிரிவிலும் நான்காவது இடத்தை பிடித்தனர்.

<<<<<END>>>>>